1993 ஏடரல் 2]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து நிலையத்தைக் கட்டுவதற்கு சுமார் 20 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப் பட்டு அது ஆய்வில் இருக்கிற காரணத்தாலே, இதைப் பற்றித் தமிழக அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 233, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

233—

சங்ககிரியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கல்.

11333—டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரியிலிருந்து அக்கமாப்பேட்டை மற்றும் சங்ககிரியைச் சுற்றியுள்ள சில கிராமங்களுக்கு குடிநீர் வழங்க ஒரு Diversion line-ஐ இந்த நிதியாண்டில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி பேரூராட்சி ரூ. 5.00 இலட்சம் வைப்பு நிதியை (Deposit) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தினால், திட்டம் மேற்கொள்ளப்படும்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியிலிருந்து 5 இலட்சம் ரூபாயைச் செலுத்தினால் இந்தத் திட்டம் நடப்பு ஆண்டிலேயே செயல் படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிலேயே இந்தத் திட்டத்தை செயற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். காலத்தில் சங்ககிரி-பள்ளிபாளையம் கூட்டுக் குடிநீர்த்திட்டம் செயல்படுத்தப்பட்டது. அப்படி இருந்தும் சங்ககிரி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்கும் மற்றும் சங்ககிரியில் உள்ள மருத்துவமனையிலும் போதுமான

பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத காரணத்தால் டி.டி.சி.யில். விரிவாக இது விவாதிக்கப்பட்டு, துறை அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து நிரந்தரமான ஒரு தீர்வு காண தனியாக Pipe line with wider diameter அமைப்பதன் மூலமே இந்தக் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க முடியும் என்று துறை முடிவு செய்து, அதன் செயல் திட்டத்தை 1991ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அரசுக்கு அனுப்பியதாக அறிகிறேன். அந்தத் திட்டத்தை மீண்டும் அரசு பரிசீலனை செய்து, செயல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி பேரூராட்சியில் உள்ள கீழ்மட்ட நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அக்கம்மா பேட்டைக்குச் செல்லும் வழியில் வீட்டு குடிநீர் இணைப்புகள் அதிகமாக உள்ளன. எனவே இப்பகுதிக்கு பிரத்தியேகமாகக் குழாய்கள் அமைத்தால் குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும். இதற்கு சுமார் 5 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று கருதப்படுகிறது. எனவே இந்த 5 இலட்சம் ரூபாயை குடிநீர் வடிகால் வாரியத்தில் செலுத்தினால் உடனடியாக அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 234, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

234—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

*11957—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் எத்தனை ?

(ஆ) அத்திட்டங்கள் முழு அளவில் மக்களுக்கு பயன் பெற பெரியார் நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வர அரசு 1992-93 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யுமா

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,